**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **நியம இல. 02**<br>முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் ஆண்டின் போது காசாக | நான் ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டிற்காக காசுப்பாய்ச்சல் கூற்று | நிறுவகம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்ட வட்டி வருமானம் மாத்திரமே குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் போது காசாக உண்மையாக பெறப்பட்ட தொகையை விடக் கூடுதலாக ரூபா 139,156 தொகை முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்படும் போது சீராக்கல் குறிப்புக்களின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படும். | நியமங்களை பின்பற்றுவதால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நியம இல. 03**<br>ஆண்டின் போது நரஹேன்பிட்டியவிலுள்ள தொழிலாளர் செயலகக் (Labour Secretariat) கட்டிடத்தில் நிறுவகம் இடமாற்றப்பட்டதால் முன்னைய கட்டிடத்தின் அலுவலக வளாகங்கள் மற்றும் விரிவுரை மண்டபங்களை பிரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பாகப்பிரிவினைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட 15 வளிப்பதனாக்கிகள் என்பன முறையே ரூபா 110,000 மற்றும் ரூபா 225,000 கிரயத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வை அகற்றுவதற்கும் சொத்துக்களை விற்பனை செய்வதிலுள்ள இலாபம்/ நட்டத்தை இனங்கண்டு இலாபம்/ நட்டத்தை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமல் சொத்துக்களின் இற்றைப் பெறுமதி ஆண்டின் வருமானமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வை அகற்றுவதற்கும் சொத்துக்களை விற்பனை செய்வதிலுள்ள இலாபநட்டத்தை இனங்காண்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் எழுத்து மூலம் கணக்காளரிற்கு அறிவுரை வழங்குவதற்கான ஒழுங்குகளை நான் மேற்கொள்வேன். | சொத்துக்களை அகற்றும் போது நியம இலக்கம் 03 இன் பிரகாரம் உரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வை இனங்கண்டு அவற்றை கணக்குகளிலிருந்து அகற்றி இலாபம்/ நட்டத்தை கணிப்பிடுவது அவசியமாகும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் மாதத்தில் வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 148,000 வருமானம் ஆண்டிற்கான வருமானமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஆண்டிற்கான வருமானம் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 148,000 நேரடி வைப்பு மீதியானது சரியாக இனங்காணப்படும் வரை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் வருமானமாக கருதப்பட முடியாதிருந்தது. | நேரடி வருமானத்தை உடனடியாக இனங்காண்பதற்கு சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா 471,162 பெறுமதியான ஐந்து நிலையான சொத்து விடயங்களில் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. இதன் விளைவாக பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடுகள் தொடர்பாக முறையான புலனாய்வொன்று மேற்கொள்ளப்படுகின்றதுடன் நிறுவனச் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான நடைமுறையொன்றை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை முறையாக முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் பெறவேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 9,385,847 ஆக காணப்பட்டது. 90 நாட்களிற்கு மேலாக நிலுவையாகவுள்ள கடன்பட்டோர் மீதி பெறவேண்டிய மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 87 சதவீதமாக காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட | கடன்பட்டோர் தொடர்பான மீளாய்வொன்றை 2020.06.03 இல் ஆளுநர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக வினைத்திறனானதும் ஆக்கபூர்வமானதுமான தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட வேண்டும. |

நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பெறவேண்டிய ரூபா 3,018,650 வருமானமும் அக் கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 யூலை 18 ஆம் திகதிய 2018/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஒரு நாள் பயிற்சி செயலமர்வுகளிற்காக ரூபா 210,000 தொகையான வளவாளர் பங்களிப்பு படிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை விஞ்சி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தன. | உயர் தர வளவாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/1567 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வளவாளர் படியாக குறிப்பிடப்பட்ட தொகைகளிற்கு சேவைகளை வழங்குவதற்கு நிபுணத்துவ அறிவுடன் கூடிய வளவாளர்கள் முன்வருவதில்லை. | அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளிற்கு அப்பால் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகம் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தால் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பணிப்பாளர் சபையின் அடுத்த கூட்டத்தில் இதனை சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமான மனித வள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 210,316 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை ரூபா 8,573,023 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 8,362,707 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிறுவகத்தின் செயற்பாட்டு வருமானத்தில் ரூபா 11,907,051 ஆல் ஏற்பட்ட குறைவே இதற்குப் பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

இது தொடர்பாக பின்வரும் விடயம் அவதானிக்கப்படுகின்றது.

மீளாய்வாண்டின் போது தொழில் அமைச்சு மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 10,768,853 தொகையை மீளளிப்புச் செய்திருந்ததுடன் கற்கைநெறிகள் மற்றும் நிலையான வைப்பு முதலீட்டு வருமானம் என்பன உள்ளடங்கலாக நிறுவகத்தால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 34,124,988 ஆக காணப்பட்டது. எனினும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 44,683,525 ஆக காணப்பட்டதால் பற்றாக்குறை ரூபா 10,556,537 ஆக காணப்பட்டது.. இது கடந்த 05 ஆண்டுகளின் போது மிக உயர்ந்த பற்றாக்குறையாகும். ஆகையால் பொதுத் திறைசேரியின் மானியங்களை பெற்றுக்கொள்ளாமல் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை பிரச்சனைக்குரிய ஒன்றாக காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழிற்பாடுகளிற்கிடையே காணப்படுகின்ற சஞ்சிகைகள், நாட்குறிப்புக்கள், பருவகால வெளியீடுகள் மற்றும் புத்தகங்களைப் பிரசுரித்தல் தொழிற்பாடு மற்றும் அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு வணிக சங்கங்களிற்கான கற்கைப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் என்பன மீளாய்வாண்டு வரை நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்திற்கு திறைசேரியால் வழங்கப்படும் நிதிகள் மிகவும் அதிகளவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நாட்குறிப்புக்கள், பருவகால வெளியீடுகள் மற்றும் புத்தகங்களைப் பிரசுரிக்க முடியாதிருந்தது. எனினும் ஆராய்ச்சி மற்றும் பிரசுரித்தல் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்காக 2020.06.03 இல் கூட்டப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட ஆளுநர் சபைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நான் செயற்படுவேன். வணிக சங்கங்களிற்காக கற்கைகள் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு புதிய பதவியணியினர் மற்றும் இடவசதி என்பன தேவைப்படுகின்றன. இச் சேவையிலிருந்து உழைப்பதை விட கட்டணமின்றி வணிக சங்கங்களிற்கான சேவைகளை இச் சேவை வழங்குகின்றது. ஆகையால் இச் சந்தர்ப்பத்தில் அவ் | பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற நிறுவக ஸ்தாபிப்பு நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிறுவகத்தால் நீண்டகால தந்திரோபாய திட்டமிடல் உருவாக்கப்பட்டு அமுலப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | வேலையை மேற்கொள்வது நிறுவகத்திற்கு சிக்கலானதாக காணப்படுகின்றது. |

**3.2 முகாமைத்துவக் குறைபாடுகள்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தொழில் திணைக்களத்தின் பணியாளர் கற்கைப் பிரிவிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட வான் ஒன்று அப் பிரிவு தொழில் திணைக்களத்திலிருந்து பிரிக்கப்பட்ட பின்னர் 2008 ஆம் ஆண்டில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமாக ஸ்தாபிக்கப்பட்ட போது நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இவ் வாகனம் நிறுவகத்திற்கு முறையாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. வாகனத்தின் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக இவ் வாகனம் ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் தனிப்பட்ட உரிமையாளர் ஒருவர் இவ் வாகனத்தின் பதிவிலக்கத்திற்கு ஒத்ததாகவுள்ள பதிவிலக்கத்துடனான வான் ஒன்றை கொண்டிருந்தமையை மோட்டார் வாகன திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. | நிறுவனத்தால் உரிமையாக்கப்பட்ட 62-5101 ஆம் இலக்கத்தைக் கொண்ட இவ் வாகனம் தொடர்பாக ஐஆர்/05/07/2020 ஆம் இலக்கத்தின் கீழ் 2020 சனவரி 06 இல் கொழும்பு மோசடி புலனாய்வு பணியகத்தில் (Fraud Investigation Bureau) முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக புலனாய்வை ஆரம்பிப்பதற்கு இவ்வாகனத்தின் மூல கோவையை கையளிக்க கோரி நீதிமன்ற கட்டளையொன்று பெறப்பட்டிருந்ததென மோசடி புலனாய்வு பணியகத்தால் எங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நீதிமன்ற கட்டளை மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020.06.03 வரை மோசடி புலனாய்வுப் பணியகத்தால் மூலக் கோவை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களினதும் உரிமைத்துவம் தொடர்பாக ஏற்கனவேயுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியதுடன் அவை கணக்குகளிற்கு முறையாக கொண்டு வரப்பட்டு அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதை அவ் இடத்தில் உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்படுத்தும் பொறிமுறையோன்று உருவாக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தொழில் கற்கைகள் நிறுவகத்தில் 09 சிரேஷ்ட மட்ட பதவிகளில் ஆறு (06) பதவிகள் 2019 திசெம்பர் 31 அளவில் வெற்றிடமாக | ஆளுநர் சபை இவ் விடயம் தொடர்பாக கலந்துரையாடியிருந்ததுடன் நிறுவனம் விரிவடைகின்ற அளவைப் பொறுத்து பதவிநிலை | பொதுத் திறைசேரியிடம் கோரிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டமைக்கான பிரதான தொழிற்பாடுகளான ஆராய்ச்சிகளை பொறுப்பேற்றல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில் கற்கைகள் தொடர்பான கற்கை பாடநெறிகளை வழங்குதல் மற்றும் சஞ்சிகைகள், பருவ இதழ்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளை பிரசுரித்தல் போன்றவற்றின் செயலாற்றலின்மைக்கு பதவியணி பற்றாக்குறையும் பங்களித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்ற போதிலும் நிறுவகத்தின் பதவியணியினரிற்காக அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) பதவி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்றது. | தீர்மானிக்கப்பட வேண்டுமென முடிவு செய்திருந்தது. 2019.12.16 ஆம் திகதிய டிஎம்எஸ்/1567 ஆம் இலக்கத்தையுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2018 யூன் 30 இல் உள்ளவாறு காணப்பட்ட பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2018 யூன் அளவில் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் இப் பதவிக்கான ஆட்சேர்ப்பு மீண்டும் அங்கீகாரம் வழங்கப்படும் வரை மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் கூட்டிணைந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு ஆகக்கூடிய வினைத்திறன் மட்டம் வரை மனித வளங்களை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் கணக்காளர் பதவிக்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத நபரொருவர் 2011 ஆம் ஆண்டில் நிறுவகத்தால் கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இந்நியமனத்துடன் இணங்க முடியாதிருந்ததென முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் நிறுவகம் இவ் அறிக்கைத் திகதி வரை இந் நிலைமையை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | 2018.11.27 ஆம் திகதிய டிஎம்எஸ்/1567 ஆம் இலக்கத்தையுடைய கடிதத்தை பெற்ற பின்னர் 2019 பெப்ரவரி 12 இல் ஆளுநர் சபை கூடியிருந்தது. 259 ஆம் இலக்க பத்திரத்தின் கீழ் கணக்காளர் பதவி தொடர்பான விடயம் மீண்டும் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் மேற்படி கடிதம் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. 39 ஆவது மற்றும் 40 ஆவது கூட்டங்களில் (பத்திர இல. 271) ஆழமான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு நிரந்தர நியமனத்தை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆகையால் டிஎம்எஸ்/1567 ஆம் இலக்கத்தையுடைய கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | முகாமைத்துவம் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்கவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்கவும் பதவியணியினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | என்பதை சுட்டிக்காட்டுகின்ற அவதானிப்புடன் நான் இணங்கவில்லை என்பதை நான் தங்களிற்கு தயவுடன் அறிவிக்கின்றேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகளின் நோக்கெல்லையின் கீழ் ரூபா 600,000 மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் இரண்டு டிப்ளோமா கற்கைநெறிகளை நடாத்துவதற்கு நிறுவகம் திட்டமிட்டிருந்த போதிலும் இக் கற்கைநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து மனித வள அபிவிருத்தியில் டிப்ளோமா கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அத்திணைக்களத்தால் வேண்டப்பட்ட நிதியேற்பாடு கிடைக்கப்பெறாததன் காரணமாக கற்கைநெறியை ஆரம்பிக்க முடியாதிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக செயலமர்வுகளை நடாத்த முடியாதிருந்ததன் காரணமாகவும் நிறுவகத்தை பத்தரமுல்லையிலிருந்து நரஹேன்பிட்டியவிற்கு இடமாற்றுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததாலும் 2019 ஆம் ஆண்டில் செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு சாத்தியமற்றிருந்தது. | அமுல்ப்படுத்தப்படக்கூடிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கும் அதனை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. |